# தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம்
## **தகவல் மற்றும் தொடர்பாடலுக்கு இணையப் பயன்பாடு**

| அலகு – 07 | மதிப்பீடு – 01 |
|---|---|

வினா வகை – **சரி, பிழை அடையாளம் இடல்**

தரம் - 07 நேரம் 15 நிமிடங்கள்

பெயர்/சுட்டெண்:-…………………………………………

**சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாளமிடுக.**

1. தகவல்களையும் கருத்துக்களையும் நபர் ஒருவருக்கு அல்லது குழுவுக்குத் தொடர்பாடல் செய்யும் முறை நிகழ்த்துகை எனப்படும். ( )
2. ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட ஏராளமான கணினி வலையமைப்புக்களின் பாரிய வலையமைப்பே இணையம் (Internet) எனப்படும். ( )
3. இணையத்தைப் பயன்படுத்தி உலகிலுள்ள எந்தவொரு இடத்தைப் பற்றிய தகவலையும் மிக விரைவாகப் பெற்றுக்கொள்ள முடியும். ( )
4. 'URL' என்பதன் விரிவாக்கம் 'Uniform Resource Locator' என்பதாகும். ( )
5. 'https' என ஆரம்பமாகும் இணையத்தள முகவரிகள் பொதுவாக நம்பிக்கையற்ற இணையத்தளங்களாகக் கருதப்படும். ( )
6. இணைய உலாவியின் (Web Browser) முகவரிப் பட்டையில் பூட்டு (Lock) சின்னம் காணப்படுவது அந்த இணையத்தளம் பாதுகாப்பானது என்பதைக் குறிக்கும். ( )
7. புவியியல் ரீதியாக வெவ்வேறு இடங்களில் உள்ளவர்கள் நேரலையில் கலந்துரையாடுவதைக் காணொளி மாநாடு (Video Conferencing) எனலாம். ( )
8. 'Skype' மற்றும் 'Zoom' ஆகிய மென்பொருள்கள் காணொளி மாநாடுகளை நடாத்தப் பயன்படுத்தப்படுகின்றன. ( )
9. மின்னஞ்சல் (E-mail) அனுப்புவதற்கு அனுப்புநருக்கும் பெறுநருக்கும் தனித்தனி மின்னஞ்சல் முகவரிகள் தேவையற்றவை. ( )
10. மின்னஞ்சல் மூலம் பாடம் (Text), படங்கள், காணொளிகள் மற்றும் ஆவணங்களை இணைப்புகளாக அனுப்ப முடியும். ( )

( புள்ளிகள் : 10 × 2 = 20 )



ICTTeacher.xyz – ICT Papers World